**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. IA.No. 3/2022 in OS.No. 85/12 Date:09.07.2025**

**Witness: Advocate Commissioner L.G.Raja Kumar**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இரணியல் வழக்கறிஞர் சங்கத்தின் பதிவு பெற்ற வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். மேற்படி வழக்கில் ஐ ஏ. 156/2012 ( Renumbered as IA.No. 384/2013 ) என்ற இடைக்கால மனுவில் இந்த நீதிமன்றம் என்னை ஆணையராக நியமித்து அதன் படி இடைக்கால அறிக்கையும், இரண்டு வரைப்படத்துடன் கூடிய இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துள்ளேன்.

மேற்படி இடைக்கால அறிக்கையும், இரண்டு வரைப்படத்துடன் கூடிய இறுதி அறிக்கையும் நீமசாஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

உண்மையான அறிக்கையை கூறி தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.நான் வழக்கு சொத்தை பார்வையிடும் போது குளச்சல் காவல்நிலைய ஆய்வாளர் உடனிருந்தார் என்றால் சரிதான், அந்த இடத்தை பார்வையிடும் போது இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் மனுதாரர் வழக்கறிஞரும் மேற்படி காவல் ஆய்வாளரும் நானும் உடனிருக்கிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தை முதல் நாள் பார்வையிட்ட போது எடுத்த புகைப்படத்தில் நான் அளவு டேப்பை வைத்து அளந்து கொண்டிருப்பது பதிவாகியுள்ளது என்றால் சரிதான். கமிஷன் மனுவிலும் மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு மெமோவில் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்ய வேண்டி குறிப்பிடவில்லையென்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் இடைக்கால அறிக்கையில் எதிர்மனுதாரர் தரப்பு 3,5,6 வினாக்களுக்கு அறிக்கையில் குறிப்பிட்டவாறு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லையென்றால் சரியல்ல, அன்றைய சழ்நிலையில் அவசரமாக பார்வையிட வேண்டியிருந்தது. பி பட்டிகை சொத்தானது

பிரதிவாதியின் தந்தை செல்லப்பன் என்பவர் அவரது சொத்தின் தென்கிழக்கு மூலையில் வாதியின் வகைக்காக கிரயம் கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

2.இடைக்கால அறிக்கையில் மேற்படி சொத்து தான் பி பட்டிகை சொத்து என்று நான் நிர்ணயம் செய்து தான் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அன்றைய தினம் பாதையும் எல்கை கற்களும் இருந்தது, அதனடிப்படையில் நிர்ணயம் செய்தேன். மேற்படி சொத்து தான் பி பட்டிகை சொத்து என்று யாரேனும் அடையாளம் காட்டினார்களா என்றால் இரு தரப்பும் அடையாளம் காட்டினார்கள். அடையாளம் காட்டி தந்ததன் அடிப்படையிலும் என்னுடைய அனுமானத்தின் அடிப்படையிலும் மனுவில் குறிப்பிட்டுள்ள எல்கைகள் , புல அமைப்புடன் ஒப்பிட்டு பார்த்து பி பட்டிகை சொத்தை தீர்மானம் செய்தேனா என்றால் பாதையும் கற்களும் இருந்தது. நான் இந்த வழக்கை முறையாக அளவீடு செய்வதற்கு வேண்டி ஆணையர் நியமன மனுவில் கூறப்பட்டுள்ள பட்டிகை சொத்தின் எல்கைகளை ஒப்பிட்டு பார்த்து பி பட்டிகை சொத்தினை நிர்ணயம் செய்யவில்லையென்றால் சரியல்ல.

3. ஆணையர் மனுவில் வழக்கு பட்டிகை சொத்துகளாக எத்தனை சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2 சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது குறிப்புரையில் 4 வது கேள்விக்கு தொகையை குறிப்பதற்கு பதிலாக 30 ஹாலோ ப்ளாக் கற்கள் உடைக்கப்பட்டுள்ளது என்று தவறுதலா குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அதிக கற்கள் பெயர்ந்து இருந்தது, அதில் 30 கற்கள் சேதமடைந்து இருந்தது. எனது வரைப்படத்தில் ஏ, பி, சி, டி என்று குறிப்பிட்டுள்ள தூரம் சுமார் 60 அடிக்கு மேல் தரைமட்டமாக உடைக்கப்பட்டிருந்த போதும் 30 கற்கள் மட்டும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக கூறுவது தவறு என்றாலும், சுமார் 350 கற்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

4. ஏ, பி, சி, டி என்பது பி பட்டிகை சொத்தல்ல, அது 2 வது முறை இடத்தை பார்வையிட சென்ற போது பிரதிவாதிகளால் மாற்றி அமைக்கப்பட்ட கட்டிட அமைப்பாகும். நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஏ, பி, சி, டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது பி பட்டிகை சொத்தையும் பிரதிவாதி சொத்தையும் பிரிக்க கூடிய எல்கை என்றால் சரியல்ல.

பி பட்டிகை சொத்தில் உள்ள எல்கையிலோ ஏ பட்டிகை சொத்தில் உள்ள எல்கை கற்களின் அமைப்புகளை இடைக்கால அறிக்கையில் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். நான் முதன் முறையாக பி பட்டிகை சொத்தை பார்வையிடும் போது பி பட்டிகை சொத்திற்கும் பிரதிவாதிக்கும் சொத்திற்கும் இடையே உள்ள காம்பவுண்ட் சுவரை தான் சேதப்பட்டுத்தப்பட்டுள்ளது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, வரைப்படம் 1 ன் படி பி பட்டிகை சொத்தில் அமையப்பெற்ற எல்கை சுவர் ஆகும். இடைக்கால அறிக்கையிலும் இறுதி அறிக்கையிலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நான் அளித்துள்ள பதில் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

5. பிரதிவாதி கட்டியுள்ள காம்பவுண்ட் சுவர் பி பட்டிகை சொத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக இடைக்கால அறிக்கையில் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் பொருட் 23.09.2012 ம் வருடம் வழக்கு பட்டிகை சொத்தை நான் மீண்டும் பார்வையிட சென்றேன் என்றால் சரிதான். அன்றைய தினம் யார் எனக்கு முதலில் குறிப்புரை கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மெமோவில் குறிப்பிட்டுள்ளவாறு பிரதிவாதியும் அவரது வழக்கறிஞரும் சொத்தை பார்வையிடும் போது எந்த வகையில் இடையூறு செய்தார்கள் என்றால் பாக பத்திரத்தின் படி அளக்க கூடாது என்றும் , உரிய சர்வே படி அளக்க வேண்டும் என்றும் கூறினார்கள். பாகபத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வரைபடத்தின் படி ப்ளாட் எண் 1 ஐ அளவீடு செய்ய வேண்டும் என்று வாதி தரப்பில் குறிப்பாணை தந்தார்கள் என்றால் சரிதான். பாகப்பத்திரத்தில் இணைத்துள்ள வரைப்படத்தில் குறுக்களவுகளோ அல்லது லேடர் அளவுகளோ இல்லையென்றால் சரிதான்.

6. ப்ளாட் எண் 1 ஆனது 10 கோணங்களில் அமைந்துள்ளது என்றால் சரிதான். பாகப்பத்திரத்தில் இணைத்துள்ள வரைப்படத்தில் குறுக்களவுகளோ அல்லது லேடர் அளவுகளோ இல்லாத காரணத்தினால் பிரதிவாதியின் தரப்பில் புது சர்வே படி அளவீடு செய்ய குறிப்புரை வழங்கினார்கள் என்றால் சரிதான். புது சர்வே படி அளவீடு செய்யாமல் நாங்கள் குறிப்புரை கொடுத்த காரணத்தினால் நான் இடையுறு செய்ததாக மெமோ தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி தேதியில் பிரதிவாதி தரப்பில்

5 கேள்விகள் அடங்கிய குறிப்புரை வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தேதியில் பிரதிவாதியால் வழங்கப்பட்ட குறிப்புரையை நான் தாக்கல் செய்துள்ள இடையூறு குறிப்புரையில் இணைக்கவில்லையென்றால் சரிதான். 1 சென்ட் பி பட்டிகை சொத்து இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யும் பொருட்டு இடத்தை பார்வையிட சென்ற போது நிர்ணயம் செய்துள்ளேன் என்றாலும் மீண்டும் அதே சொத்தை நிர்ணயம் செய்ய தேவையில்லையென்றாலும் அதனடிப்படையில் பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் குறிப்புரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்ட மெமோவிலும் இறுதி ஆணையர் அறிக்கையிலும் பிரதிவாதி தரப்பில் என்னை பட்டிகை சொத்தை பார்வையிட இடையூறு செய்வதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்த இடைக்கால அறிக்கையில் நான் முதன் முதலாக பட்டிகை சொத்தை பார்வையிட்ட போது கொடுக்கப்பட்ட குறிப்புரையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இடைக்கால அறிக்கையில் பதிலளிக்கப்பட்ட பின்னரும் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லையென்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் கட்டப்பட்டட காம்பவுண்ட் சுவரானது பி பட்டிகை சொத்தில் கட்டாமல் பிரதிவாதியின் இடத்தில் கட்டப்பட்டுள்ளது என்று எனது இறுதி அறிக்கையில் J , K என்று தவறுதலாக குறிப்பிட்டு அறிக்கையின் வரைபடமும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆணையர் வரைப்படத்தில் கருப்பு கலரில் காட்டப்பட்ட கோடு As per lie என்றும் சிகப்பு நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோடு As per partition என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆணையர் வரைப்படம் 1 ல் பிரதிவாதி சொத்தில் மேற்கூறியவாறு குறிப்பிடவில்லையென்றால் ரி சர்வே படி தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன், இந்த வரைப்படத்தில் குறிப்பிடுவதற்கான தேவை எழவில்லை. வரைபடம் 2 லும் நான் காட்டவில்லையென்றால் சரியல்ல, இரண்டிலும் வேறுபாடு இல்லாததால் காட்டவில்லை. எனவே வரைபடம் 1 மற்றும் 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள அ பட்டிகை சொத்தின் அளவுகளில் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வரைப்படம் 1 ல் B, J என்ற புள்ளிகளுக்கிடையில்

பிரதிவாதிகளின் கேட் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் முதல் அறிக்கையை தாக்கல் செய்யும் பொருட்டு பார்வையிட சென்ற போது அங்கு கேட் இல்லை, 3வது முறை பார்வையிட சென்ற போது மேற்படி கேட் இருந்ததால் குறிப்பிட்டுள்ளேன்.

8. வரைபடம் 1 ல் மஞ்சள் சாயம் இட்டு காட்டியுள்ள பி பட்டிகையாக தவறுதலாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. A, B, J, C என்ற எல்கை புள்ளிகளில் உள்ள காம்பவுண்ட் சுவர் தான் இடிக்கப்பட்ட காம்பவுண்ட் சுவர் என்றாலும் அதே இடத்தில் தான் தற்போதும் காம்பவுண்ட் சுவர் அமைந்துள்ளது என்றாலும் சரியல்ல. J,C,K புள்ளிகளை விடுவித்து A, B, J புள்ளிகளை ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது ஆணையர் வரைபடமும், இடைக்கால அறிக்கையும், இறுதி அறிக்கையும் நீதிமன்றம் ஒரு சரியான முடிவிற்கு வர கூடிய சங்கதிகளை தெளிவுப்படுத்தாத ஒருதலைபட்சமான அறிக்கை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு தேவையான உண்மையான சங்கதிகளை கூறாமல் பொய்யான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

9. என்னுடைய அறிக்கை நடுநிலையான அறிக்கை இல்லையென்றாலும் , நான் தாக்கல் செய்துள்ள இடைக்கால அறிக்கையும், இறுதி அறிக்கையும் அதனுடன் தாக்கல் செய்துள்ள வரைப்படமும் நிராகரிக்கப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்

**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. IA.No. 3/2022 in OS.No. 85/12 Date:09.07.2025**

**Witness: Advocate Commissioner L.G.Raja Kumar**

<u>முதல் விசாரணை</u>

நான் இரணியல் வழக்கறிஞர் சங்கத்தின் பதிவு பெற்ற வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். மேற்படி வழக்கில் ஐ ஏ. 156/2012 ( Renumbered as IA.No. 384/2013 ) என்ற இடைக்கால மனுவில் இந்த நீதிமன்றம் என்னை ஆணையராக நியமித்து அதன் படி இடைக்கால அறிக்கையும், இரண்டு வரைப்படத்துடன் கூடிய இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துள்ளேன்.

மேற்படி இடைக்கால அறிக்கையும், இரண்டு வரைப்படத்துடன் கூடிய இறுதி அறிக்கையும் நீமசாஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

உண்மையான அறிக்கையை கூறி தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.நான் வழக்கு சொத்தை பார்வையிடும் போது குளச்சல் காவல்நிலைய ஆய்வாளர் உடனிருந்தார் என்றால் சரிதான், அந்த இடத்தை பார்வையிடும் போது இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் மனுதாரர் வழக்கறிஞரும் மேற்படி காவல் ஆய்வாளரும் நானும் உடனிருக்கிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தை முதல் நாள் பார்வையிட்ட போது எடுத்த புகைப்படத்தில் நான் அளவு டேப்பை வைத்து அளந்து கொண்டிருப்பது பதிவாகியுள்ளது என்றால் சரிதான். கமிஷன் மனுவிலும் மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு மெமோவில் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்ய வேண்டி குறிப்பிடவில்லையென்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் இடைக்கால அறிக்கையில் எதிர்மனுதாரர் தரப்பு 3,5,6 வினாக்களுக்கு அறிக்கையில் குறிப்பிட்டவாறு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லையென்றால் சரியல்ல, அன்றைய சூழ்நிலையில் அவசரமாக பார்வையிட வேண்டியிருந்தது. பி பட்டிகை சொத்தானது

பிரதிவாதியின் தந்தை செல்லப்பன் என்பவர் அவரது சொத்தின் தென்கிழக்கு மூலையில் வாதியின் வகைக்காக கிரயம் கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

2.இடைக்கால அறிக்கையில் மேற்படி சொத்து தான் பி பட்டிகை சொத்து என்று நான் நிர்ணயம் செய்து தான் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அன்றைய தினம் பாதையும் எல்கை கற்களும் இருந்தது, அதனடிப்படையில் நிர்ணயம் செய்தேன். மேற்படி சொத்து தான் பி பட்டிகை சொத்து என்று யாரேனும் அடையாளம் காட்டினார்களா என்றால் இரு தரப்பும் அடையாளம் காட்டினார்கள். அடையாளம் காட்டி தந்ததன் அடிப்படையிலும் என்னுடைய அனுமானத்தின் அடிப்படையிலும் மனுவில் குறிப்பிட்டுள்ள எல்கைகள் , புல அமைப்புடன் ஒப்பிட்டு பார்த்து பி பட்டிகை சொத்தை தீர்மானம் செய்தேனா என்றால் பாதையும் கற்களும் இருந்தது. நான் இந்த வழக்கை முறையாக அளவீடு செய்வதற்கு வேண்டி ஆணையர் நியமன மனுவில் கூறப்பட்டுள்ள பட்டிகை சொத்தின் எல்கைகளை ஒப்பிட்டு பார்த்து பி பட்டிகை சொத்தினை நிர்ணயம் செய்யவில்லையென்றால் சரியல்ல.

3. ஆணையர் மனுவில் வழக்கு பட்டிகை சொத்துகளாக எத்தனை சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2 சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது குறிப்புரையில் 4 வது கேள்விக்கு தொகையை குறிப்பதற்கு பதிலாக 30 ஹாலோ ப்ளாக் கற்கள் உடைக்கப்பட்டுள்ளது என்று தவறுதலா குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அதிக கற்கள் பெயர்ந்து இருந்தது, அதில் 30 கற்கள் சேதமடைந்து இருந்தது. எனது வரைப்படத்தில் ஏ, பி, சி, டி என்று குறிப்பிட்டுள்ள தூரம் சுமார் 60 அடிக்கு மேல் தரைமட்டமாக உடைக்கப்பட்டிருந்த போதும் 30 கற்கள் மட்டும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக கூறுவது தவறு என்றாலும், சுமார் 350 கற்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

4. ஏ, பி, சி, டி என்பது பி பட்டிகை சொத்தல்ல, அது 2 வது முறை இடத்தை பார்வையிட சென்ற போது பிரதிவாதிகளால் மாற்றி அமைக்கப்பட்ட கட்டிட அமைப்பாகும். நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஏ, பி, சி, டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது பி பட்டிகை சொத்தையும் பிரதிவாதி சொத்தையும் பிரிக்க கூடிய எல்கை என்றால் சரியல்ல.

பி பட்டிகை சொத்தில் உள்ள எல்கையிலோ ஏ பட்டிகை சொத்தில் உள்ள எல்கை கற்களின் அமைப்புகளை இடைக்கால அறிக்கையில் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். நான் முதன் முறையாக பி பட்டிகை சொத்தை பார்வையிடும் போது பி பட்டிகை சொத்திற்கும் பிரதிவாதிக்கும் சொத்திற்கும் இடையே உள்ள காம்பவுண்ட் சுவரை தான் சேதப்பட்டுத்தப்பட்டுள்ளது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, வரைப்படம் 1 ன் படி பி பட்டிகை சொத்தில் அமையப்பெற்ற எல்கை சுவர் ஆகும். இடைக்கால அறிக்கையிலும் இறுதி அறிக்கையிலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நான் அளித்துள்ள பதில் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

5. பிரதிவாதி கட்டியுள்ள காம்பவுண்ட் சுவர் பி பட்டிகை சொத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக இடைக்கால அறிக்கையில் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் பொருட் 23.09.2012 ம் வருடம் வழக்கு பட்டிகை சொத்தை நான் மீண்டும் பார்வையிட சென்றேன் என்றால் சரிதான். அன்றைய தினம் யார் எனக்கு முதலில் குறிப்புரை கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மெமோவில் குறிப்பிட்டுள்ளவாறு பிரதிவாதியும் அவரது வழக்கறிஞரும் சொத்தை பார்வையிடும் போது எந்த வகையில் இடையூறு செய்தார்கள் என்றால் பாக பத்திரத்தின் படி அளக்க கூடாது என்றும் , உரிய சர்வே படி அளக்க வேண்டும் என்றும் கூறினார்கள். பாகபத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வரைபடத்தின் படி ப்ளாட் எண் 1 ஐ அளவீடு செய்ய வேண்டும் என்று வாதி தரப்பில் குறிப்பாணை தந்தார்கள் என்றால் சரிதான். பாகப்பத்திரத்தில் இணைத்துள்ள வரைப்படத்தில் குறுக்களவுகளோ அல்லது லேடர் அளவுகளோ இல்லையென்றால் சரிதான்.

6. ப்ளாட் எண் 1 ஆனது 10 கோணங்களில் அமைந்துள்ளது என்றால் சரிதான். பாகப்பத்திரத்தில் இணைத்துள்ள வரைப்படத்தில் குறுக்களவுகளோ அல்லது லேடர் அளவுகளோ இல்லாத காரணத்தினால் பிரதிவாதியின் தரப்பில் புது சர்வே படி அளவீடு செய்ய குறிப்புரை வழங்கினார்கள் என்றால் சரிதான். புது சர்வே படி அளவீடு செய்யாமல் நாங்கள் குறிப்புரை கொடுத்த காரணத்தினால் நான் இடையுறு செய்ததாக மெமோ தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி தேதியில் பிரதிவாதி தரப்பில்

5 கேள்விகள் அடங்கிய குறிப்புரை வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தேதியில் பிரதிவாதியால் வழங்கப்பட்ட குறிப்புரையை நான் தாக்கல் செய்துள்ள இடையூறு குறிப்புரையில் இணைக்கவில்லையென்றால் சரிதான். 1 செண்ட் பி பட்டிகை சொத்து இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யும் பொருட்டு இடத்தை பார்வையிட சென்ற போது நிர்ணயம் செய்துள்ளேன் என்றாலும் மீண்டும் அதே சொத்தை நிர்ணயம் செய்ய தேவையில்லையென்றாலும் அதனடிப்படையில் பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் குறிப்புரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்ட மெமோவிலும் இறுதி ஆணையர் அறிக்கையிலும் பிரதிவாதி தரப்பில் என்னை பட்டிகை சொத்தை பார்வையிட இடையூறு செய்வதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்த இடைக்கால அறிக்கையில் நான் முதன் முதலாக பட்டிகை சொத்தை பார்வையிட்ட போது கொடுக்கப்பட்ட குறிப்புரையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இடைக்கால அறிக்கையில் பதிலளிக்கப்பட்ட பின்னரும் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லையென்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் கட்டப்பட்டட காம்பவுண்ட் சுவரானது பி பட்டிகை சொத்தில் கட்டாமல் பிரதிவாதியின் இடத்தில் கட்டப்பட்டுள்ளது என்று எனது இறுதி அறிக்கையில் J , K என்று தவறுதலாக குறிப்பிட்டு அறிக்கையின் வரைபடமும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆணையர் வரைப்படத்தில் கருப்பு கலரில் காட்டப்பட்ட கோடு As per lie என்றும் சிகப்பு நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோடு As per partition என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆணையர் வரைப்படம் 1 ல் பிரதிவாதி சொத்தில் மேற்கூறியவாறு குறிப்பிடவில்லையென்றால் ◌ரி சர்வே படி தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன், இந்த வரைப்படத்தில் குறிப்பிடுவதற்கான தேவை எழவில்லை. வரைபடம் 2 லும் நான் காட்டவில்லையென்றால் சரியல்ல, இரண்டிலும் வேறுபாடு இல்லாததால் காட்டவில்லை. எனவே வரைபடம் 1 மற்றும் 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள அ பட்டிகை சொத்தின் அளவுகளில் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வரைப்படம் 1 ல் B, J என்ற புள்ளிகளுக்கிடையில்

பிரதிவாதிகளின் கேட் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் முதல் அறிக்கையை தாக்கல் செய்யும் பொருட்டு பார்வையிட சென்ற போது அங்கு கேட் இல்லை, 3 வது முறை பார்வையிட சென்ற போது மேற்படி கேட் இருந்ததால் குறிப்பிட்டுள்ளேன்.

8. வரைபடம் 1 ல் மஞ்சள் சாயம் இட்டு காட்டியுள்ள பி பட்டிகையாக தவறுதலாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. A, B, J, C என்ற எல்கை புள்ளிகளில் உள்ள காம்பவுண்ட் சுவர் தான் இடிக்கப்பட்ட காம்பவுண்ட் சுவர் என்றாலும் அதே இடத்தில் தான் தற்போதும் காம்பவுண்ட் சுவர் அமைந்துள்ளது என்றாலும் சரியல்ல. J,C,K புள்ளிகளை விடுவித்து A, B, J புள்ளிகளை ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது ஆணையர் வரைபடமும், இடைக்கால அறிக்கையும், இறுதி அறிக்கையும் நீதிமன்றம் ஒரு சரியான முடிவிற்கு வர கூடிய சங்கதிகளை தெளிவுப்படுத்தாத ஒருதலைபட்சமான அறிக்கை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு தேவையான உண்மையான சங்கதிகளை கூறாமல் பொய்யான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

9. என்னுடைய அறிக்கை நடுநிலையான அறிக்கை இல்லையென்றாலும் , நான் தாக்கல் செய்துள்ள இடைக்கால அறிக்கையும், இறுதி அறிக்கையும் அதனுடன் தாக்கல் செய்துள்ள வரைப்படமும் நிராகரிக்கப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்